# புக்குழி மாலை

பதிப்பாளர்
சு. நரேந்திரகுமார்

நெறியாளர்
முனைவர் ய. மணிகண்டன்
உதவிப்பேராசிரியர்

**தமிழ் இலக்கியத்துறை**
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-600 005.
2011

# புக்குழி மாலை

பதிப்பாளர்

**சு. நரேந்திரகுமார்**

நெறியாளர்

முனைவர் **ய. மணிகண்டன்**

உதவிப் பேராசிரியர்

**தமிழ் இலக்கியத்துறை**

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை-600 005.

2011

# "சுவடியியலும் பதிப்பியலும்"

*2010-2011ஆம் ஆண்டிற்கான*
*பட்டயப் பேற்றிற்காகச்*
*சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு*
*அளிக்கப்பெறும் பதிப்பேடு*
*பதிவு எண்:43011066*

முனைவர் ய. மணிகண்டன்
உதவிப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-600 005.

# நெறியாளர் சான்றிதழ்

சென்னைப் பல்கலைக்கழக, சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காக 2010-2011ஆம் கல்வி ஆண்டில் **"புக்குழி மாலை"** எனும் தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இப்பதிப்பேடு என்னுடைய மேற்பார்வையின் கீழ் முதுகலை மாணவர் **சு. நரேந்திரகுமார்** சொந்த முயற்சியில் உருவாக்கப் பட்டுள்ளது என்று சான்றளிக்கிறேன்.

நாள் :

இடம்: சென்னை-5.

நெறியாளர்

**சு. நரேந்திரகுமார்**
*தமிழ் இலக்கியத்துறை,*
*சென்னைப் பல்கலைக்கழகம்,*
*சென்னை-600 005.*

# பதிப்பாளர் உறுதிமொழி

*சுவடியியலும் பதிப்பியலும் என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத்துறைக்கு அளிக்கப்பெறும்* **“புக்குழி மாலை”** *என்னும் தலைப்பிலான இப்பதிவேடு எனது சொந்த முயற்சியில் உருவானது என்றும் இது இதற்கு முன்பு வேறு எந்தப் பட்டயத்திற்கும் அளிக்கப்பெறவில்லை என்று உறுதி அளிக்கிறேன்.*

*நாள் :* *(சு. நரேந்திரகுமார்)*

*இடம்: சென்னை-5.* *பதிப்பாளர்*

# நன்றியுரை

சுவடியியலைப் பட்டயப் படிப்புக்காக வைத்துள்ள சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும், முதுகலையில் சுவடி பற்றிய புரிதலையும் மாணவர்கள் பெற வேண்டும் என்று மாணவர்களை ஊக்கப்படுத்தும் தமிழிலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் வீ. அரசு அவர்களுக்கும் எனது சுவடியைப் பதிப்பிக்க அனைத்து நிலைகளிலும் நெறியாள்கை செய்தவருமான பேரா. ய. மணிகண்டன் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் வகுப்பு எடுத்த பேரா. ய. மணிகண்டன் விரிவுரையாளர் இளங்கோ, லதா ஆகியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கீழ்த்திசை சுவடி, நூலகத்திற்கும், சுவடியை தேர்ந்தெடுக்க உதவிய ஐய்யனார் அவர்களுக்கும் என் நன்றி.

கணிப்பொறி அச்சு செய்து தந்த டுடே கிராபிக்ஸ் நிறுவனத்தாருக்கும், என் குடும்பத்தாருக்கும், என்னோடு இருந்து உதவிய என் நண்பர்களுக்கும் நன்றி...!

# பதிப்புரை

சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள கீழ்த்திசை சுவடி நூலகத்திலிருந்து சுவடி (R;7379)ல் புக்குழிமாலை என்பது நான் பதிப்பிக்க எடுத்துக் கொண்ட நூல்.

இக்கதையை எழுதிய ஆசிரியரின் பெயர் G. மரியதாசு என்பவர் ஆவார். இப்பகுதி 88 பாடல்களைக் கொண்டுள்ளது. இப்பாடல்கள் எழுசீர் கழிநெடிலடி ஆசிரியவிருத்தத்தைச் சார்ந்தது. பாடல் தோறும் இறுதி அடியில் 'புக்குழிப் பதியில் வளர்பெருங் கருணை நாயகியே' என்றே எல்லாப் பாடலும் அமைந்து காணப்படுகிறது. மேலும் சுவடியில் இருந்த ஒற்றுப் பிழைகளையும் நான் திருத்தி எழுதியுள்ளேன். பெண் தெய்வத்தைப் போற்றும் பாடல்களாக இவை காணப்படுகின்றன.

# ஹரி ஓம் நன்றாக! குரு வாழ்க!

# புக்குழி மாலை

1. சீருறு மங்கைப் பராபர வஸ்தைச்
சிறந்தி டுமாயி ரமாண்டு
பேருறு மெழுத்து ஐந்துடன் மூன்றும்
பெருகநீ உருவது செபித்துக்
காருறு கங்கைக் காசியில் வாசி
சதாசிவன் வலப்புறம் பெற்றுய்
வாருறு கொங்கைப் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே

2. அரிபிர மாதி தேடுதற் கினிய
அரியதென் காசியின் தலத்தில்
கரிமுகன் தன்னோ டறுமுகன் காரி
கதிர்வர நந்தித் தண்டேசன்
திரள்புய துவார அறுபத்து மூவர்
சின்மலர் முதலை வந்தித்தேன்
வருதிரு நகராம் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

3. தழல் நடம் புரிய அரியயன் தேவர்
தான்புகுந் துறுதல் புக்குழியாம்
மழவிடை யுடையோன் அற்புத வினாசீம்
மாற்றலால் தருவ வினாசி
அழகுசா றுவியும் கூபவெண் கரிமுன்
அச்சிக்க வாரண வாசி
வழமிகு வளபால் தட்சிண காசி
வளர்பெருங் கருணை நாயகியே.

4. அழல் நடம் புரிய பிரணவந் தன்னில்
அலைந்திடும் குறையது தவிர
நளினமாள் தேவர் மரபரி சூழ்ந்துறு
நீள்பா தினாத்தருக் கீர
உளமிகு தங்கிப் புரிந்திடக் காசி
உத்தமன் வந்து தென்பாகம்
வளமிகு தலத்தில் வரமுனக் கென்ருர்
வளர்பெருங் கருணை நாயகியே.

5. கருடவ ஏரும ருடநய னயீசன்
கதிர்முடி கண்டனன் என்று
திருடறை கூறச் சிவன்சபித் தப்பால்
செல்கென முனிந்து கோபிக்க
தரைபட வீழ்ந்து தோத்திரஞ் செய்ய
தவிருமித் தலமென் தலத்தில்

வருடரை றயன்செய் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

6. கரியல கன்று இருநிலத் திழித்துக்
கானகக் கன்றுடன் கலந்து
திரியிற நாளில் அசுரர்தன் வதையால்
தேவர்கோ சபிக்க னார்தன்சொல்
பரிந்துதன் பெயரால் தீர்த்தத்திடல் படிந்துதன்
பன்னிரு வருசம் பூசிக்க
வருகிரி கதிர்சேர் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

7. அந்தநாட் டிலங்கை இராவணன் பாட்டி
அருமகப் பிறவு நீரதனில்
சிந்தையை நாட்டி அயன்தனைக் கருத
தெரிந்தயன் வந்து தென்காசி
எந்தைபால் செல்கென் றருளது புரிய
எய்திமூ வருடம் வாசிக்க
வந்ததாடகைக் குஅருள் செய்புக் குழியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

8. தால்விலா நாக லோகத்தின் கன்னி
தயவுடன் திங்கள் மூரிவரு
நாள்செலு மளவில் திராவிட தேச
நல்லரித் துவசன் வந்தவளை

வேள்மண முகிழ்ந்து கோயில்கோ புரமும்
வியன்பணி முடித்தவர் தமக்கு
வாழ்கயி லாய மருள்செய்புக் குழியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

9. திருவடர் விந்தைக் கிரியதன் தென்பால்
செனித்திடு மொழிவன நகரில்
வருவடர் வியாத வேடனித் தலத்தில்
உய்தவஞ் செய்திடச் சிவன்வந்து
பெருவடர் குலத்தில் பூபனுக் கருள்செய்
பிள்ளைமீன் றளிக்கவள் வாழ்ந்து
உருவடன் றனக்கு அருள்செய்புக் குழியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

10. கௌட தேசத்தில் மறையவன் திருடிக்
கருடனு மறுபிறப் பிதனில்
அவடனுஞ் சங்க கன்னனுஞ் சானுய
வரைகொன் ருலையப் பொருளை
கவருற கெண்ணி இத்தலத் தீசன்
காற்சிலம் பயந்துநாள் கருத்தில்
வவநின வதற்கருள் செய்புக் குழிப்பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

11. முருகமர் நகரில் மெஞ்ஞான கோமுட்டி
மோசனுந் திருபவு னுசி

திருவிளர் தன்னில் சரக்குவிற் றழகு
தேவடி பிறகுபோய்க் கோவில்
அருவைதன் னழகு பார்த்தவள் வீட்டில்
அமுதுண்டு விக்குமெய் சேர்த்து
வருகதி பெற்ருன் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

12. சதுமுகப் புரத்தில் தருமன்சேர் சென்றன
சபைதன்னில் திருவ வினசி
புதுமைகெட் டுயர்ந்து மனைவிய ருடனே
புண்ணிய தலத்தை முந்தருள்
விதிமுறை அநேக தானதர் மங்கள்
விரும்பினன் மைந்தர்பெற் றுயர்ந்து
வதிகதி யடைந்தான் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

13. கலியுகந் தாதி திருவவி னாசிக்
கங்கர தனசந் ததிவேண்டி
நெலிவுற மனைவி யிருவர்தொண் டதுக்கு
நேர்ந்தனன் கருணை பின்னவர்க்கு
கெலிவுற வளர்த்த முதலையுண் டருது
கேவலமூ வரண்டதி லாரூர்
வலிய சுந்திரர் செயன்றழைத்த புக்குழியில்
வளர் பெருங் கருணை நாயகியே.

14. அந்தண னொருவன் தந்தைதன் னெலும்பை
அடைத்தொரு கலசத்தி லதனை
தந்தலை வைத்து இந்தநற் றலத்தில்
தானது பூவெனக் கண்டு
முந்தவோர் காசி யெலும்புகண் டானபின்
மொழியறி விசேசமித் தலத்தில்
வந்திடப் புற்ப மானபுக் குழியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

15. அகிலமா கியசீர் தலமெலாம் நீயே
ஆகிலு மீதிறப் பெருங்கருணை
புகழுதற் கரிய பெருந்தய வாகி
பொருந்தினை புகலுமித் தலத்தில்
வெகுளியன் செய்த பிழையெலாம் பொறுத்து
வினவினை நினைவிலு மதியும்
வகிலகா ரணியே புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

16. உடலதாய் உயிராய் உயிர்க்குயிர் துணையாய்
உயரண்ட புவனங்க ளாகி
கடலதாய் மலையாய் சராசர புவனங்கள்
உயிராத் தோற்றங்க ளாகி
மடலதாய் ஒலை எழுத்துமாய் எழுத்தில்
வாசனைப் பொருளுள் பயனாய்

வடலதாய் உனது கேள்வர்புக் குழியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

17. விடமுகுங் காள கண்டனா ருடனே
விமலியே சிதம்பரந் தன்னில்
நடமிடும் பாத பங்கயச் சரணம்
நரநினைந் துருகு நாள்புரிவாய்
படமிடுஞ் சாப நாக்கங் கணியே
பாருல கேழையு மீன்ருய்
வடமிடுங் கொங்கைப் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

18. தாட்டடந் தன்னை நினைந்தின முருகித்
தமியனு மினிதின மெனது
நாட்டட முன்னைக் கண்டுநின் றுருகி
நானுக் கடிமையே யாக
ஆட்டட மதுவாய் அருள்புரி தேவி
ஆதியம் பிகைதிரி சூல
வாட்டடங் கண்ணிப் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

19. படிதனி லினிய கல்விகற் றனது
பாதபங் கயந்தனைப் புரிவாய்
வெடிதனி லினிய வேதசாஸ் திரத்து
மெய்நின்று தன்னையே யுனது

அடிதனி லினிய கருத்தை யுன்னுவற்
கொரு துன்ப மில்லை
வடிவினி லனிய புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

20. இரந்தினிக் கொருவர் முகமது பார்த்து
ஏங்கிடா வகையதாய் எனையும்
புரிந்திட வேணும் நின்னருள் தன்னால்
பிறவொரு தெய்வநான் அறியேன்
நிரந்தர மான நிற்கள ரூபி
நேசமாய் இகல்பர மாணம்
வரந்தரும் பரையே புக்குழிப் பதியில்
வாழ்பெருங் கருணை நாயகியே.

21. ஆசையாய் நேரத் திரவோடு பகலும்
அடியினைக் கன்பராய் உனையே
பூசைதான் புரியும் நேசவர் தமக்குப்
பொருந்துரு மனதுடைச் சீயேவு
மோசனாம் பிசாசன் அறிவில்லாச் சிறியர்
மூடனுக் கிரங்குவாய் தயவாய்
வாசியாங் காசி விசேசபுக் குழியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

22. காலையம் பொழுது வாலையத் தொழுது
கருதிருந் திரிபுறை உச்சி

மாலையம் போது புலனையைத் தொழுதிடு
வார்மனந் தனிலமந்த ருள்தேவி
பாலையார் தனிலே வாசமாய் மேவும்
பராபரி அழகினில் மிகுத்த
வாலைசுந் தரியே புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

23. காலையும் மாலையும் உச்சியும் போது
கருதுவார் நெஞ்சகந் தனிலே
ஆலைய மாக அமர்ந்தருள் தேவி
அறிவிலாச் சிறியனோ அறியேன்
வேலையும் இதுவாய் இருப்பவர் பங்கில்
விளங்கிடும் பராபர வனிதை
வாலையம் புனையே புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

24. கயிலையங் கிரியும் தில்லைவாழ் காசி
கதிதரு மருணை மாநகரும
இயல்தரு மதுவாய் கச்சிமா விஞ்சை
இமகிரிக் கடவுள் வேளூரும்
பயில்தரு மிராமே சுரமெனும் யேரூர்
பண்டவி னாசிலோ கத்தில்
வயிரவி நீயே புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

25. காசி விசாலாட்டி மதுரை மீனாட்சிக்
கச்சிக்கா மாட்சி நீயாகி
பேசிய யேரூர் மரகத வல்லி
பிறங்கிய தையல் வேளூரில்
ஓசைசே ருனை உண்ணா முலைச்செல்வி
உயர்தல மெங்குநீ தாயே
வாசிய சிதம்பர சிவகாமி புக்குழியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

26. சூலிநீ நீலி திரிபுரைக் கன்னி
சுந்தரி துற்கைமா காளி
நீலிநீ கபாலி நிற்கள ரனந்தி
நிரந்தரி நிற்மய தேவி
மாலிநீ யான லச்சுமி வாணி
வரந்தரு மூன்றுரு வாகி
வாலைநீ யுமையே புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

27. ஓங்காரி சக்தி காதல கபாலி
யாவனக் காளிமா கன்னி
நீங்காரி துற்கை நிமலியென் தோழி
நிர்த்தகலி யாணி சாம்பவநீ
ஆங்காரி வாடகை அகோரி வீரச்சி
அந்தரி சிங்கவா கனத்தி

வாங்காரி காந்தாரி புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

28. காரணி கவுரி சத்திகா மாச்சி
கனதனப் பயோதர வல்லி
நாரணி கவுரி துற்கைமா காளி
நர்க்கங் கணிதிரி சூலி
ஆரணி கன்னி வீரிகங் காளி
அயன்தலை அரிந்திடுங் கோரி
வாரணி முலெசேர் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

29. அரிபிரு (விறு) மாதி ஈசரு மூவர்
அர்ச்சனைப் புரிந்துனை நெடுநாள்
பரிவுடன் உலகைப் படைத்தின்ன பிரமன்
பாங்குடன் மாலவனுக் காக
விரிவுறு முலகை யுத்திர னளிக்க
மேவுமுத் தொழிலுமே யுனது
விரிவளிக் கிற்ற புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

30. கரதல கபாலி உனதருள் தன்னைக்
கனவிலும் நினைவிலுந் துதிக்க
வரமது புரிவாய் சிவாயசங் கரியே
வருசிவன் இடத்தினி லுரையே

பராபர வனிதை அம்பிகை கவுரி
பரமகலி யாணி புக்கொளியில்
வருகார்வர வழைத்த புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

31. எத்தனை விதத்தி லெடுக்கினும் மறைக்க
எண்ணினு முனதரு னல்லால்
அத்தனை விதத்தி நினவதிப் பலங்கள்
யாவது மொன்றினி யில்லை
சித்தம்வைத் தெனையும் வாழ்விக்கும் பரையே
செய்தவ மொன்றுநா ருக
வர்த்தனை புரியும் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

32. உடலது எடுத்து உனமறந் திடும்பேர்
ஒருகரு மங்களு மில்லை
சடமது எடுத்து மிருகமாய் போவார்
தான்செய்த குறையதோ முன்னம்
மடமயி லுனது பதமடுத் தவர்க்கு
வருகதி வேதமே சொல்லும்
வடமணி யுரத்திப் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

33. அல்லவை தேய்வ அறமது பெருக
அர்ச்சனை அனுதினம் செய்ய

நல்லவை வருக பொல்லவை யகல
நாவினா லுனைத்துதி செய்ய
புல்லரை யகல நல்லரை யணுக
புண்ணி மிதுவெலாம் அவர்கள்
வல்லமை யல்ல புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

34. அந்தநல் மனைவி சற்குண மதுவும்
ஆண்மைகள் தன்னெறி வாழ்வும்
சந்ததி விபேக நற்குண மதுவாய்
தயவொடு தர்மதா னங்கள்
பந்துநற் சனமும் சகோதர வலிமை
படைத்திடும் புண்ணிய யாவும்
வந்திடு முனதுகிருபை புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

35. மாயத்தின் சென்மம் யோனிகள் தோறும்
மருவியே உடலது எடுத்து
காயத்தி நோய்கள் பிணியது கண்டு
கசிவுடன் மயங்கிடா வகைநீ
யேயருக் கிரங்கி யருளது புரிவாய்
பெருந்திரு கோபுர வாசல்
வாயிலற் சிறந்த புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

36. பெற்றிடுந் தந்தை தாயவர் பெண்டிர்
பிள்ளைகள் சகோதர் மயங்கி
உற்றிடுங் கால தூதர்வந் தவரும்
உடலுயிர் வாங்கிய போது
நற்றிடு முனது பாதபங் கயத்தை
நமக்கருள் ·மானில மாய்கை
வற்றிட அருளும் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

37. உப்பது பொதிந்த உடலது தனிலே
ஒன்பது வாசலும் ஊத்தை
மெய்பொரு காற்றைப் பொதிந்திடும் பாண்டம்
மெய்யென நண்ணவு நெறியேன்
செப்பமாய் உனது பாதபங் கயத்தைத்
தினமுநான் கருதவும் வாழ்வும்
வைப்பது தருவாய் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

38. நரைதிரை மிகவும் பெருவய தெய்தி
நமதுடல் யிணியது கொண்டு
உரைநிரை குளறி விழயது சொருகி
உயிரது உடல்விழும் போது
தரைநிரை மாய்கை மனைவியர் சிறுவர்
தானது துணையிலை நீயே

வரைதுரை மகளே புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

39. புவியது மாய்கை யாசையி னாலே
பெண்டுபிள் ளைகளென எண்ணி
தவியது இல்லாப் பாடது பட்டுத்
தானது லட்சணை பண்ணி
இவையது நமது துணையென எண்ணும்
இயல்பிலா மூடசண் டாளன்
வலியனை யாட்கொள் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

40. அந்தியும் பகலு முந்தனைத் தொழுது
அருளது நீங்கிடா வகையால்
எந்தநற் சிந்தை ஐயறி வதனை
ஈஸ்வரி ஒருவழிப் படுத்தி
முந்தவுன் னருளால் இயல்பர மாண்டு
முறைமையா விளங்கிட வுனையே
வந்தனை புரிந்தேன் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

41. உன்பத நினைய உயிர்கதை கேட்க
உனதருள் மனதினில் நம்ப
அன்பொடு பகலும் உனைத்துதி செய்ய
ஐயறிவொரு வழிப் படுத்தி

இன்புட னுனயே நெக்குநெக் குருகி
இறைஞ்சிடு மன்பர்பால் வந்து
வன்பது அருளும் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

42. தோத்திர முன்னைத் தொழுவது முன்னைத்
தொண்டுபட் டிருப்பது முன்னை
நேத்திர மதனில் காண்பது முன்னை
நெஞ்சக நேயமு முன்னை
காத்திர மதனில் வணங்குவ துன்னைக்
கனவிலும் நனவிலு முனையே
வாழ்த்துவ துன்னைப் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

43. அண்டரு முண்ட கரசன் னிரியும்
அருமுனி ஒருமறை நகரில்
விண்டல யெண்டயிரர் பதமது தீர்த்தம்
விளங்கிய காசிமா நதியும்
தண்டிதழ் நீண்ட அந்திகழ் வில்வந்
தான்பண்டை வெடித்திடா நகரில்
வண்டர் தொண்டர்வாழ் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

44. ஒன்பது கோடி களைதனி லொன்று
உயர்சிவன் தனக்கருந் தாயே

துன்பது கோடி உடல்மன வினையேன்
தோல்பொம்மைக் கூத்திது தனிலே
எண்பது கோடி நினைவது நினையும்
ஈஸ்பரி மாய்கையில் வினையேன்
வன்பது கோடியகற் றுபுக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

45. உன்னிட நிலமை கன்னியென் றுரைக்கும்
உயர்சிவன் பிரம நாசாரி
என்னிட மறைகள் சாஸ்திர மெல்லாம்
இயம்பது கன்னியென் றுன்னை
உன்னுட னுதித்த துலகெலா முலகத்து
உயிரெலாம் உந்தனைத் தாயே
வன்னையே யென்றுரைக்கும் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

46. முந்தவே சத்தி சிவத்தைநீ படைத்து
முற்றுமே யவரிடன் தனிலே
வந்திடும் சத்தி சிவமதாய் பிறந்து
மன்னுயி ரனைத்தையுங் காத்தாய்
வந்தனை யல்லா லொருதெய்வ முண்டோ
உயிர்சிவன் சத்திநீ தாயே
வந்தனை புரிந்தேன் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

47. மயேசுர னென்றும் சதாசிவ னென்றும்
மாலன்ன பிரமனாய் வந்தால்
மயேசு பரியென்று உமையவ ளென்றும்
வருவைநீ வாணிலட் சுமியாய்
தயேசுபரி சிவன்பின் வேறுரு வெடுத்தால்
சங்கரி யெவ்வுரு எடுப்பாய்
வயேசுபரி நீயே புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

48. தேக்கிய கல்வி வாணியும் கேள்வர்
திருமுன்பு செயமெனக் கல்வி
நோக்கமி லாது அறிவமென் றழைக்க
நொடியினி லுமதிடம் வருக
ஏக்கமாய் வாணி இசைகள் கையவிடம்
ஈஸ்பரி கண்டுநீ இரங்கி
வாக்குடைச் செல்வி யருள்செய்புக் குழியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

49. காசியில் தவசி விராகன் ஐந்நூறு
கைத்தண்டில் வைத்தது தவறி
ஓசைசேர் கங்கை வீழ்ந்தமிழ்ந் திடவும்
உறுதயா ரவநவி னாசி
பேசிய காசிக் கிணற்றினில் தோண்டு
புறப்படக் கண்டுளம் மகிழ்ந்து

வாசியாய் காசி விசேசபுக் குழியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

50. சங்கது திகழும் தாமரை வாவி
தான்முறி இழுவட மற்றும்
சங்கும லிங்க தார்தனை யதனைத்
தானடித் தாள்களும் தள்ள
லிங்க மத்தனை தெற்பநற் குளத்தில்
நெறியவன் எறிந்து போ கினதை
வங்கது மீன்கொண் டருர்செய்புக் குழியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

51. கொங்கணர் போகர் அழுகணி சித்தர்
குதம்பா ரட்டியே முதலாய்
நங்குணர் சட்டை முனியிடைக் காடர்
நிற்றிட மூவரெய் யகப்பை
உங்குணந் தன்னில் அவளுட(ன்) நின்று
உயர்நட்ட சித்தர்கள் பெற்ருர்
வங்கணற் கருள்செய் புக்குளிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

52. நண்பொடு உனையே ஆராதனை செய்து
ஞான யோகிசுர ராகி
தென்பொடு உனது அஷ்ட்ட சித்தியினால்
சிறந்திடும் பெரியவ ராகி

ஒன்பது கோடிச் சித்தருள் பதத்தை
உன்னியே பரகதி சேர்ந்தர்
வன்பொடு வினையேற் கருள்செய்புக் குழியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

53. திரிபுறை தகனி மாலய னரனும்
சிறந்திடு மாசனக் காலர்
அரியயன் சிவனும் மூவருன் பதத்தை
அர்ச்சனை புரிவர்க ளம்மா
விரிவுறு மகில கோடியுன் பதத்தில்
மேவிடுஞ் சிலம்பதாம் சிலம்பில்
வருவது பருளாம் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே

54. ஆணுமாய் பெண்ணா யகிலகா ரணியாய்
அண்டரண் டங்களு மாகி
தாணுவாய் பரையாய் தற்பரா னந்தி
சகலபல் லுயிர்களு மாகி
தூணுமாய் சிவத்தைக் காத்திடும் பொருளாய்
தோன்றினை பராபர வல்லி
வாணியாய் திருவாய் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

55. ஆமையாய் மீனாய்ப் பன்றியாய் கருகி
அரிநர சிங்கரூ பமுமாகி

தேமலி பரசு இராமனாய் வாசு
தேவனாய் திசதா ரமா
பூமகள் மார்பன் பலதேவ னென்றுரை
கும்புகன் றிடில் பத்திரம்
வாமன் தங்கைப் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

56. கலியாண விக்காத னாரிபிட் சாடகங்
காழ்தன காமசந் திரராய்
கெலியுமை கிரத அகோர வீரருமாய்
கேசரி புரகந் தாயா
சலந்தர கால கரபதன் ரிஷப
சருவேஷ கதெட்சிணி விஷேகர்
வலசுக சூத்திரர் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

57. கல்லினி லெறிந்தும் பிள்ளையை யறுத்துக்
கன்னிடந் தர்ச்சனை புரிந்து
வில்லினி லடித்து மதந்தலை வெட்டி
விட்டெறி வாட்டயன் றுறும்
அல்லினை நிற்பரனைத் தூதுசெய் சுந்தரன்
அவன்வசத் தன்வயிறு கிழித்தான்
வல்லரா முனது புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

58. வந்துதான் மிருககண் டன்தவந் தனைக்கண்டு
வயதுபதி னாறென வோதி
தந்தமாற் கண்டன் தவந்தனற் கிரங்கி
தாளினா லெமன்தனை யுதைக்க
முந்துதே வர்கள் மொழியை யுன்மொழியை
முன்வைத்து மெய்யமென் பெற்ரு
வந்தமாற் கண்டற் கருள்செய்புக் குழியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

59. தெண்டிரை சூழும் புவிதனில் சென்மம்
செனித்திடும் போது தனக்கு
தண்டமிழ் கொண்டுந் தனையா உணர்ந்து
சார்பதாய் உனைநினைந் துருகி
தொண்டுசெய் தகலா நண்பொடு உனையே
தொழுதவர் கதியது பெறுவார்
வண்டிரை வனஞ்சூழ் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

60. தசைரத்த நாடி யுடம்பினில் வலிமை
சத்தியின் கூறிது தானே
இசையுற்ற சீவன் எலும்பு இந் திரியம்
ஈதான கூறிது வாதி
நசையுற்ற சத்தி சிவமதாய் நின்று
நாயகி யுடலுயிர் படைத்தாய்

வசையுற்ற நகர புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

61. அஷ்ட்டநற் கிரிகள் சுவாசுகற் பகரவாய்
அதுநடுத் தூண்மகா மேரு
முட்டவும் பரவெளி மெய்த்திரு சுடர்கள்
முறைவிளக் கிட்டநிற் புவனம்
இஷ்ட்டமும் இருநூற்று இருபத்து நாலும்
இயலடுக் கோணகி லாண்டம்
வட்டநற் சிற்றில் விளையாடு புக்குழி
வளர்பெருங் கருணை நாயகியே.

62. அஞ்சுலட் சணஞ்சேர்ந் தாவது மென்ன
அருளறி யார்தமிழ்ப் புவியில்
கொஞ்சலட் சணஞ்சேர்ந் தொழிவது மங்கித்
குவயியந் தனில்விளங் காது
மிஞ்சுலட் சணஞ்சேர் உனதரு ளல்லால்
வேறெரு பயனிலை தேவி
வஞ்சலட் சணந்தீர் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

63. தரைக்காவ லார இருந்திடும் போது
தயாபரி யுனதருள் தன்னை
உரைகாவ லார இருந்திடும் போது
உடலெடுத் தொருபய னில்லை

புரைக்காட் டசூழ்தி ருவவினாசி
புண்ணியன் வலப்புறம் பெற்ருய்
வரைக்காவ லன்சேர் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

64. தண்ணிலாக் கண்ணி தரித்திடும் பரையே
தமையனும் அனுதின முலகில்
மண்ணினால் பெண்ணில் மயங்கிடா திருக்க
வகையதா யருள்செய்வா யெனையும்
கண்ணினால் நோக்கித் திருவுனம் புரிந்து
காப்பதுங் கடனுனக் கம்மா
வண்ணமாங் கன்னி புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

65. கலைம தித்த செஞ்சுடா தரியே
கள்வனான் ஐயறி வதனால்
அலைமதிக் கருத்த னற்புத சண்டாளன்
அறிவினில் அடங்கிடாக் கொடியே
புலைபடத் தவியன் றன்னினைவு
பொய்நெறி மாதரை விரும்பி
வலைமதிக் கருள்செய் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

66. சிந்தனை யுன்னை அந்தியும் பகலும்
தெரிசனை செய்வது முன்னை

வந்தனை யுன்னை புந்தியில் மறவார்
வாழ்த்துவார் தோத்திர முன்னை
உந்தனை யல்லால் வேறொரு தெய்வ
உணர்கிலா படித்தா யென்னை
வந்தனை யாட்கொள் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

67. பொய்யகந் தனிலே சொல்லினு மாதர்
புணர்ச்சியி லழுந்திருந் தொல்லை
செய்யகந் தனிலே மயங்கினுஞ் செல்வம்
சேரினும் உறுதுயர் வந்து
அய்யகந் தனிலே எண்ணினும் பதந்தை
அடியனான் மறந்திடா வகையால்
வையகந் தனிலே புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

68. மஞ்சளைப் பூசி முகமது மினுக்கி
வருசனங் காணவே தெருவில்
இன்சொலைப் பேசிக் காசது பறிக்கும்
இளமுலை மாதரை விரும்பி
சஞ்சலப் படுவார் சிற்றின்ப மாய்கை
தமியனு மதுமொரு பொருளாய்
வஞ்சொலைப் பேண்சென் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

69. குடமணி வடமும் ஆபர ணாதி
கொய்மலர்ச் சேலைக ளுடுத்தி
நடமிடு மாதர் பலவித மாய்கை
நலங்குத லிதுவெகு தொல்லை
தடநடு காமர் மருளமெய் மினுக்கும்
சண்டிக ளாசைபொல் லாது
அடவுடன் விடநீ அருள்செய்புக் குழியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

70. சிற்றின்ப மெல்லாம் அறிவிலார் செய்கை
திருவருள் நம்புவ ருன்னை
நிற்றின்ப மெல்லாம் பரகதி தருமே
நாயகி போகயோக் கியங்கள்
மற்றின்ப மெல்லாம் லோகத்தின் மாய்கை
வாமியுன் னருளது புரிந்தால்
வற்றின்பம் வேண்டேன் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

71. சாமிசுந் தரனார் பாடலுக் கிரங்கி
தான்வர முதலைவாய்ப் பிள்ளை
பூமியந் திரஞர் இருப்பவ ரறியப்
பிள்ளையை அழைத்தகா ரணியே
காமிசுந் தரியே உன்செய லெல்லாங்
காலாந் திரிபுரை யுமையே

வாமியந் திரியே புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

72. தெண்டிசை கொண்ட தட்சிண காசி
சீருறு காசி யுன்னருளை
அண்டருந் தொண்டர் மாலயன் முனிவர்
அறிந்திடற் கரியகா ரணியே
பண்டரு மறைகர் வண்டிடற் கரிய
பராபரி யறிவினி லடங்கார்
வண்டரைத் தொண்டுசெய் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

73. ஆரணன் நூறு ஆண்டது தவஞ்செய்
தன்னியலங் காரங்கள் காண
காரணன் கோயில் தேரது சேயன்
கையினிற் கங்கணர் தரித்து
வாரணன் வானோர் வாசனை சூழ்நற்
திருவிழா வதுந டத்தும்
வாரணன் வாசி புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

74. உனதருள் தன்னைத் திருவருள் புரிவாய்
உமையெனு மனோமணித் தாயே
எனதுசிந் தையிலே வியாகுல மென்றும்
இருளது நீங்கிடும் படியாய்

கனவிலுந் துதிகள் செய்யவும் நினைவுக்
கதியருள் திரிபுரை யுமையே
வனசசெந் தாள்துதி யருள்செய்புக் குழிப்பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

75. கோசிகன் வாம தேவநற் சனகன்
குருமுனி வதிஷ்டன்மாற் கண்டன்
தேசிகன் சூதர் வியாக்கிரம பரதர்
தெரிதமிழ் நயமி சாரணியர்
காசியி லதிக தலமென வந்து
கருதுவார் நிஷ்டைக ளதனால்
வாசிகன் வலப்பால் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

76. கங்கனும் பிங்கன் காளியுங் கூளி
கசிவது யோர வினாசி
லிங்கன்புக் குழியு பிறந்திடக் கண்டு
நெறியிதோ காசியில் வாசர்
பங்கம் வந்தது வின்போது தனக்குப்
பார்பதிக் கருணை என்றருள்க
வங்கவன் செய்கை யெழும்புபுக் குழிப்பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

77. முப்பத்து மூன்று தேவாதி
முனியீசரர் அரிபிர் மாதி

தப்பற்று வாழ்ந்த வேத சாஸ்திரங்கள்
தானறியா துநின் பெருமை
ஒப்பற்ற சோதி உணர்சிலாப் பொருளே
உனைத்துதி செய்யநீ செய்த
வப்பத்து நீங்கேள் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

78. கன்றிய மனத்தன் செய்பிழை பொறுத்துக்
கருயெவ் வேளையும் புரிந்து
நன்றியை மறக்கேன் உனைத்துதி செய்ய
நன்பொரு ளறியநீ செய்து
வென்றியை உரைக்கத் திருவருள் புரிந்தாய்
விமலியே உனதருள் தன்னால்
வன்றிறல் விடுப்போன் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

79. ஓம்நம சிவாய சங்கரி யென்று
உயர்நினை வதனையே யுன்னி
தாமத குணம்போய் சாத்துவ விதத்தில்
தன்புல னைந்தையு மடக்கி
யேமசர் மங்கள் தியானதோத் திரஞ்செய்து
இறைஞ்சிடு மன்பருக் கிரங்கி
வான மீதவிப் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

80. தோத்திரத் தொக்குச் சிங்கிவை யாக்கி
சொல்லிய பொறிகளின் வழியே
காத்திரத் திருக்கும் பிருதிவி அப்புக்
கனல்புனல் நைந்திட சேரும்
சூஷ்திர மறிந்து புலன்களைத் துறந்து
சோதியே மெய்யுணர் வறிவார்
வாழ்த்துவ தெங்கே புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

81. வறுமையி னாலே பெரியது மயங்கி
வினவியே அறிவிலா ரிடத்தில்
சிறுமைகள் படாமல் அருளது புரிவாய்
தெட்சண காசியி லுமையே
நனுமையா கியசீர் கற்பர மாண்டு
நாயிக யுனதரு ளிறங்கி
வறுமைகள் யோக அருள்செய்புக் குழியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

82. கய்ப்பது புவியில் தான தர்மங்கள்
கருதிடா ஈகைகள் புரியார்
மெய்ப்பது கர்மம் தன்னை இரச்சிக்க
வேமெருரு பயனிலை பிழைத்து
பொய்ப்பிழைப் பதுவுன் மெய்யென எண்ணி
புத்தியே தகமாய் திரியும்

வைப்பது தவிர்ப்பாய் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

83. சீத ரத்ததின் உடலது தனிலே
செய்வினை சேர்ந்தது கிரணம்
ஏத குத்தத்தில் நாலு லட்சங்கள்
இதிலொரு நோய்கொள் சடலம்
பேத குத்தத்தில் முக்குணச் செய்கை
புரண்டது நோய்கள் கொள்ளாமல்
வாத பித்தத்தைச் சமன்செய்புக் குழிப்பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

84. அந்தணர் பெரியோர் நல்லவ ருனது
அருளடி யார்தமக் குதவார்
வந்தனை நினையார் உயர்கதை கேளார்
உனதருள் மனமதி லுணரார்
இந்தநல் லறிவு சிந்தனை இல்லார்
இருந்தொரு பயனிலையினி மானிடராய்
வந்தெனப் புவியில் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

85. தொகைவ கையாகிய இலக் கணம்
இலங்குசொற் பொருளாய் பலங்தூரம்
பகதொகை யான சீர்தனை யசைகள்
பருபத நெடிலொடு குறில்கள்

இகல்வகை வார நேர்நிறை மூவின
எண்கணமா கியமங்கலச் சொற்கள்
வகைதொகை யருள்செய் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

86. புந்திக்கு ளாசை வாழ்கவும் பிழைப்புப்
பெருகவும் பெண்ணிற்ற நினைவு
உந்திக்குள் செனித்த அயன்விதித் திடவோ
உன்மனதில் நினைவினில் முடியாய்
சிந்திக்கும் போது கதையது பிழைப்புத்
திருவளச் செய்லது உனையே
வந்திக்க அருள்செய் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

87. இரவொடு பகலு முனைத்துதி செய்ய
இல்லினுக் கழகுசந் ததிகள்
திறமது வாகி உத்தய முயற்சி
செய்தொழில் புத்தி வித்தைகளும்
இரவலர் பெரியோர்க் கருள்செல்வ நல்கி
இடம்பொரு ளேவல்மூன் றதுவும்
வரமது புரிவாய் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

88. சிந்தனைக் கரசே வரத்தினில் பிறந்த
செய்கைகள் சித்திய தாக

தந்தெனைக் காத்தால் மெய்யது வாகும்
தரணியில் பெருமைக ளுண்டு
உந்தனைத் தாயே கவிதையின் துதிகொண்
டோதின நினைவ தன் படியே
வந்தனைக் காப்பாய் புக்குழிப் பதியில்
வளர்பெருங் கருணை நாயகியே.

- புக்குழி மாலை முற்றும் -